# தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை-600 035. தொலைபேசி எண்.044-2951 5590

## ஆணை நாள் 13.07.2026

## முன்னிலை

**முனைவர் அதுல்ய மிஸ்ரா, இ.ஆ.ப. (ஓய்வு)**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண்.CP 4383/SCIC/2024**

திரு. சா. அப்துல் சமத் - புகார்தாரர்
5/12, பார்த்தசாரதி, 6வது தெரு
பழைய வண்ணாரப்பேட்டை
சென்னை-600 021.

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர் / - பொது அதிகார அமைப்பு
செயற்பொறியாளர்,
மண்டலம்-4, பெருநகர சென்னை மாநகராட்சி
எண்.266, திருவொற்றியூர் நெடுஞ்சாலை
தண்டையார்பேட்டை,
சென்னை-600 021.

## ஆணை

| | | |
|---|---|---|
| **1.** | **மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்ட மனு** | **23.05.2024** |
| 2. | மனுதாரரின் முதல் மேல்முறையீட்டு மனு | 04.07.2024 |
| 3. | மனுதாரரின் புகார் மனு | 23.09.2024 |

மனுதாரர், தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் 23/05/2024 நாளிட்ட மனுவை பொதுத் தகவல் அலுவலர் / சென்னை மாநகராட்சி மண்டல அலுவலகம், மண்டலம்-4, பழைய வண்ணாரப்பேட்டை, சென்னை 21 அவர்களுக்கு அனுப்பி, அதில் "சென்னை மாநகராட்சி வார்டு 48-ல் எத்தனை தூய்மை பணியாளர்கள் உள்ளனர் ? " என்பன போன்று 6 (ஆறு) இனங்களில் தகவல்களை அளிக்கக் கோரியுள்ளார்.

2. இன்றைய (13/07/2026) ஆணையத்தின் விசாரணையின் போது மனுதாரர் திரு. சா.அப்துல் சமத் அவர்கள் ஆஜராகவில்லை. எனினும், மனுதாரர், 03/07/2026 தேதியிட்டு ஆணையத்திற்கு அனுப்பியுள்ள கடிதத்தில் "நான் கடும் மாற்று திறனாளி, என்னால் நேரடியாக வர இயலாது. ஆகையால் ஆணையம் எடுக்கும் முடிவிற்கு கட்டுப்படுகின்றேன் " எனக் குறிப்பிட்டுள்ளார். பொது அதிகார அமைப்பின் சார்பில், Dr.P.மகேஸ்வரன், கூடுதல் தலைமை கால்நடை மருத்துவ அலுவலர், மண்டலம்-4, பெருநகர சென்னை மாநகராட்சி, தண்டையார்பேட்டை, சென்னை-21 அவர்கள் நேரில் ஆஜரானார். **ஆணையத்தின் முன் உள்ள ஆவணங்களைப் பரிசீலனை செய்கையில், மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 6(1)-ன் கீழான 23/05/2024 தேதியிட்ட மனுவிற்கு, உரிய காலவரையறையான 30 நாட்களுக்குள் எவ்வித தகவலையும் பொதுத் தகவல் அலுவலர் திரு.ராதாகிருஷ்ணன், செயற்பொறியாளர், மண்டலம்-4, பெருநகர சென்னை மாநகராட்சி அவர்கள் எவ்வித தகவலும் அளிக்கவில்லை எனத் தெரிய வருகிறது. எனவே, மேற்சொன்ன திரு.ராதாகிருஷ்ணன், செயற்பொறியாளர் அவர்கள் மீது சட்டப்பிரிவுகள் 20(1) மற்றும் 20(2)-ன் கீழ் ஏன் நடவடிக்கை மேற்கொள்ளக் கூடாது என்பதற்கான காரண விளக்கத்தை இவ்வாணை கிடைக்கப் பெற்ற 15 தினங்களுக்குள், தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் வாயிலாக ஆணையத்தில் சமர்ப்பிக்க வேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது. தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் மேற்சொன்ன திரு.ராதாகிருஷ்ணன், செயற்பொறியாளர் அவர்களிடமிருந்து காரண விளக்கக் கேட்பு குறிப்பாணைக்கான விளக்கத்தைப் பெற்று அதனை ஆணையத்தில் 07/08/2026 அன்று நேரடியாக ஆஜராகி சமர்ப்பிக்க வேண்டுமென்று பணிக்கப்படுகிறார்.**

**ஒம்./-(அதுல்ய மிஸ்ரா)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவி பதிவாளர்**

**<u>வழக்கு எண்.CP 4383/SCIC/2024</u>**

**பெறுநர்**

**<u>பொது அதிகார அமைப்பு</u>**

பொதுத் தகவல் அலுவலர் /
செயற்பொறியாளர்,
மண்டலம்-4, பெருநகர சென்னை மாநகராட்சி
எண்.266, திருவொற்றியூர் நெடுஞ்சாலை
தண்டையார்பேட்டை, சென்னை-600 021.

2. திரு.ராதாகிருஷ்ணன்
பொதுத் தகவல் அலுவலர்/ செயற்பொறியாளர்
மண்டலம்-4, பெருநகர சென்னை மாநகராட்சி
எண்.266, திருவொற்றியூர் நெடுஞ்சாலை
தண்டையார்பேட்டை, சென்னை-600 021.

**<u>புகார்தாரர்</u>**

திரு. சா. அப்துல் சமத்
5/12, பார்த்தசாரதி, 6வது தெரு
பழைய வண்ணாரப்பேட்டை
சென்னை-600 021.
Phone : 9962073794

நகல்

1.ஆணையாளர்
பெருநகர சென்னை மாநகராட்சி
ரிப்பன் மாளிகை, சென்னை-600 003.

2.பதிவாளர் (for follow up)
தமிழ்நாடு தகவல் ஆணையம்
நந்தனம், சென்னை-35

RG/Sr.PC